C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

கோரிக்கை.		(ரூபாய் ஆயிரத்தில்)
61	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ..	11,29,50
	மொத்தம்--C. கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும். ..	11,29,50
	பெரு மொத்தம் ..	4,94,14,80

6. அறிவிப்புகள்--தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1994 (ஆ.இ.)

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "1994 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்."

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

(ஊ) நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.